அ.வ.எண் : 205/2016

தேதி : 08/10/2020

பெயர் : சொர்னலிங்கம்

நேரம் : முற்பகல் 10.55 முதல் 11.25 வரை.

<u>வா..சா. 1 குறுக்கு விசாரணை</u>

வாதி கோயில் குடும்ப கோயில் பொது கோயில் அல்ல. வாதி கோயில் சமுதாய கோயில் கிடையாது. அருள்மிகு சித்தி விநாயகர் கோயில் எந்த வருடம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாது. கோயிலில் கல்வெட்டு உள்ளதா என்றால் இல்லை. எங்களின் மூதாதையர் ஆகிய ஒரு சொர்னலிங்க ஆச்சாரி என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. என்னுடைய தாத்தா சொர்னலிங்க ஆச்சாரிக்கு வாரிசுகள் யாரும் கிடையாது. என்னுடைய தாத்தா என்னுடைய தந்தை திருநாவுக்கரசு என்பவரை சுவீகாரம் எடுத்துக்கொண்டார். என்னுடைய தந்தைக்கு உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என் தந்தையுடன் பிறந்தவர் ஒரு கல்யாண சுந்தரம் மற்றும் ஒரு பெண் வாரிசு இருந்து வந்தார். என்னுடைய தந்தை திருநாவுக்கரசு ஆச்சாரி மற்றும் என் தந்தை உடன் பிறந்த கல்யாண சுந்தரம், முத்துலெட்சுமி ஆகியோர்கள் இருந்து வந்தார்கள். என்னுடைய தாத்தா சொர்னலிங்க ஆச்சாரி என்னுடைய தந்தை திருநாவுக்கரசு என்பவருக்கு 1948ல் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயில் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் என்னிடத்தில் வைத்துள்ளேன். வாதி கோயிலுக்கு சொத்து விவரம் சுமார் 2556 சதுர அடி உள்ளது. அதை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது. மேற்படி கோயிலுக்கு வரவு செலவு கணக்கு பராமரித்து வருகிறீர்களா என்றால் இல்லை. வாதி

கோயிலுக்கு வருவாய் ஆவணங்களான அ பதிவேடு எதுவும் இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 744/80 என்ற வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில்தான் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் தரப்பினா் இல்லை. மேற்படி வழக்கில் வாதி சொக்கம்மாள் என்பவருக்கு சாதகமாக தீர்ப்பு ஆகவில்லை என்றால் சரிதான். அதனால்தான் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 744/80 ன்கீழ் காஞ்சிபுரம் சாா்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு எண் 7/1981 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மேல் முறையீட்டு மனுவும் சொக்கம்மாள் என்பவருக்கு சாதகமாக 2002 ல் தீர்ப்பு வரவில்லை என்றால் சரிதான். என்னுடைய தந்தை 05/03/1995 ல் காலமாகி விட்டார்.அசல் வழக்கு எண் 744/80 என்ற வழக்கில் என்னுடைய தந்தை இந்த வழக்கின் வாதி அருள்மிரு சித்தி விநாயகா் கோயிலுக்கு அறங்காவலா் என்பதற்கு குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய தந்தை உடன் பிறந்த கல்யாண சுந்தரம் என்பவருக்கு 3 ஆண்வாரிசுகள் உள்ளார்கள்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)